**+1 கணக்குப்பதிவியல் ஆண்டு இறுதித் தேர்வு மார்ச் -2023**

**சரியான விடை 20X1=20**

| A Type | B Type |
|---|---|
| 1.(ஈ) ஆயத்த கணக்கியல் மென்பொருள் | (அ) அனைத்து சரக்குகளின் கடன் விற்பனை |
| 2.(அ)ஆண்டுதோறும் குறையும் | (ஈ)ஆயத்த கணக்கியல் மென்பொருள் |
| 3. (ஈ) இயந்திரம் | (ஆ) மேலெழுதுதல் |
| 4. (ஈ) அச்சுப் பொறி | (ஆ) விதிப் பிழைகள் |
| 5. (இ) புலனாகா சொத்து | (அ) இருப்புநிலைக் குறிப்பு |
| 6. (அ) வங்கி அறிக்கை மற்றும் ரொக்க ஏட்டின் வங்கி பத்தி | (அ) அனாமத்து கணக்கு |
| 7. (இ) வியாபாரத்தின் சொத்துக்கள் முதல் மற்றும் பொறுப்புகளுக்கு சமமானது | (அ) நடப்பு காலத்திற்கு |
| 8. (இ) துணையேடு மற்றும் முதன்மை ஏடு இரண்டும் | (அ)ஆண்டுதோறும் குறையும் |
| 9.(ஆ) சொத்தினை பயன்பாட்டிற்கு இட்ட நாள் முதல் | (இ) ஒவ்வொரு பேரேட்டு கணக்கின் இருப்பை அறிய |
| 10. (இ) இந்திய பட்டயக் கணக்காளர் நிறுவனம் | (அ) வங்கி அறிக்கை மற்றும் ரொக்க ஏட்டின் வங்கி பத்தி |
| 11. (ஈ) லூகா பாசியோலி | (இ) முதலினை |
| 12.(அ) இருப்புநிலைக் குறிப்பு | (இ) வியாபாரத்தின் சொத்துக்கள் முதல் மற்றும் பொறுப்புகளுக்கு சமமானது |
| 13. (ஆ) விதிப் பிழைகள் | (இ) இந்திய பட்டயக் கணக்காளர் நிறுவனம் |
| 14. (இ) முதலினை | (அ) இருப்புநிலைக் குறிப்பின் சொத்துப் பக்கம் |
| 15. (அ) அனாமத்து கணக்கு | (இ) துணையேடு மற்றும் முதன்மை ஏடு இரண்டும் |
| 16. (அ) இருப்புநிலைக் குறிப்பின் சொத்துப் பக்கம் | (ஈ) இயந்திரம் |
| 17. (இ) ஒவ்வொரு பேரேட்டு கணக்கின் இருப்பை அறிய | (ஈ) அச்சுப் பொறி |
| 18. (அ) நடப்பு காலத்திற்கு | (இ) புலனாகா சொத்து |
| 19. (ஆ) மேலெழுதுதல் | (ஆ) சொத்தினை பயன்பாட்டிற்கு இட்ட நாள் முதல் |
| 20. (அ) அனைத்து சரக்குகளின் கடன் விற்பனை | (ஈ) லூகா பாசியோலி |

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X2=14**

**21. கணக்கியல் தகவல்களில் ஆர்வமுடையவர்கள் அகப் பயனீட்டாளர்கள்:-** உரிமையாளர்கள், பணியாளர்கள், நிர்வாகம்.

**புறப் பயனீட்டாளர்கள்:-** முதலீட்டாளர்கள், வாடிக்கையாளர்கள், கடனீந்தோர், வரிவிதிப்பு அதிகாரிகள், ஆராய்ச்சியாளர்கள், நிதிநிறுவனங்கள் மற்றும் அரசாங்கம்.

**22. நிறுவன தொடர்ச்சி அனுமானம்:** இதன்படி, ஒரு வணிக நிறுவனம் தொடரக்கூடியது மற்றும் நீண்ட காலத்திற்கு தொடர்ந்து செயலாற்றும் என்ற எதிர்பார்ப்பின் அடிப்படையிலேயே நடத்தப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| **23.ஆள்சார் கணக்கு** | பெறுபவரை பற்று செய்க | தருபவரை வரவு செய்க |
| **சொத்து கணக்கு** | உள்வருவதை பற்று செய்க | வெளிச் செல்வதை வரவு செய்க |
| **பெயரளவு கணக்கு** | அனைத்து நட்டங்களையும் செலவுகளையும் பற்று செய்க | அனைத்து வருமானங்களையும் ஆதாயங்களையும் வரவு செய்க. |

| | |
|---|---|
| 24. (i) வெளித்தூக்கு கூலி | **பற்றிருப்பு** |
| (ii) விற்பனை | **வரவிருப்பு** |
| (iii) முதலீடுகள் | **பற்றிருப்பு** |
| (iv) வாராக்கடன் | **பற்றிருப்பு** |

**25. உரிய குறிப்பேடு:** துணை ஏடுகளான ரொக்க ஏடு, கொள்முதல் ஏடு, விற்பனை ஏடு, கொள்முதல் திருப்ப ஏடு, விற்பனைத் திருப்ப ஏடு, பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு ஏடு மற்றும் செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு ஏடு போன்ற ஏடுகளில் பதிய முடியாத எஞ்சிய பதிவுகள் உரிய குறிப்பேட்டில் பதிவு செய்யப்படுகின்றன.

உரிய குறிப்பேட்டில் அல்லது பொதுக் குறிப்பேட்டில் வேறு எங்கும் எந்த துணைப்பிரிவிலும் பதிவுப் பெறாத நடவடிக்கைகளுக்கான குறிப்பேடுகள் பதிவு செய்யப்படுகின்றன.

**26. சில்லறை ரொக்க ஏடு** என்பது அடிக்கடி நிகழக்கூடிய சிறுசெலவினங்களான வண்டிச் சத்தம்,கூலி, தபால் தந்தி செலவு, அச்சு எழுது பொருள் செலவு போன்றவற்றை பதியும் தனி ரொக்க ஏடாகும்.

**27.** அ) விற்பனைக் கணக்கில் ரூ.100 **வரவு** வைக்க வேண்டும்
ஆ) கொள்முதல் கணக்கில் ரூ.400 **வரவு** வைக்க வேண்டும்.
இ)கொள்முதல் திருப்பகணக்கில் ரூ.600 **பற்று**வைக்க வேண்டும்.
ஈ)விற்பனைத்திருப்ப கணக்கில் ரூ.700 **பற்று** வைக்க வேண்டும

**28.** .தேய்மானத் தொகை $= \frac{\text{சொ.ஆ.அ.வி - எ.இ.ம}}{\text{சொ.எ.நோ.பயன காலம்}}$

$= \frac{10000 - 2000}{10} = \frac{8000}{10} = \mathbf{800}$

தேய்மான விகிதம் $= \frac{\text{ஆண்டுத் தேய்மானத் தொகை}}{\text{ஆரம்ப அடக்க விலை}} \times 1000$

$= \frac{800}{10000} \times 100 = \mathbf{8\%}$

**29. கணினிமயக் கணக்கியல் முறை** என்பது கணினியைப் பயன்படுத்தி கணக்குகளைப் பராமரிக்கும் முறை ஆகும். இது கணக்கேடுகள் பராமரிப்பு மற்றும் அறிக்கைகள் தயாரிப்பதற்கு ஏற்ப கணக்கியல் நடவடிக்கைகளே, வன்பொருள் மற்றும் மென்பொருள் கொண்டு செயல் முறைக்கு உள்ளாக்கப்படுவதை உள்ளடக்கியதாகும்.

**30. (i)** பங்காதாயம் நேரடியாக வங்கியில் வரவு வைத்தது குறித்து

**(ii)** சொந்த தேவைக்காக சரக்கு எடுத்தது குறித்து

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X3=21**

**31. கணக்கியலின் முக்கியத்தும்:**

**1.முறையான பதிவேடுகள்:-** அனைத்து நிதிசார்ந்த நடவடிக்கைகளும் கணக்கேடுகளில், முறையாகவும் பொதுவான தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டும் தொகுக்கப்படுகின்றன.

**2.நிதிநிலை அறிக்கைகள் தயாரித்தல்:-** வருமான அறிக்கை அல்லது இறுதிக் கணக்குகளை, உரிய காலத்தில் தயாரிப்பதன் மூலம் வணிகத்தின் இயக்கமுடிவுகளையும், நிதிநிலையையும் அறியமுடியும்.

**3.வளர்ச்சியை மதிப்பிடல்:-** நிதிசார் விவரங்களைப் பகுப்பாய்வு மற்றும் உய்த்துணர்வு செய்வதன் மூலமாக பல்வேறு செயல்களின் வளர்ச்சியை மதிப்பிடவும் பலவீனங்களைக் கண்டறியவும் இயலும்.

**32. பணம் சார்ந்தநடவடிக்கைகள் கணக்கியலில் பதியப்படுதல் வேண்டும் - விவரி**

பணமதிப்பீட்டுக் கருத்தின்படி, எந்த நடவடிக்கைகளைப் பணத்தால் அளவிட முடியுமோ, அந்த நடவடிக்கைகள் மட்டுமே கணக்குகளில் பதியப்படவேண்டும் என்பதைக் குறிக்கிறது. பணமானது, பரிமாற்றத்தின் ஊடகமாக விளங்குவதால், பணத்தால் அளவிடக் கூடிய நடவடிக்கைகள் பதிவு செய்யப்படுகின்றன.

M.MuthuSelvam PG Asst MLWA HSS Madurai Cell No: 9842104826

| 33. கணக்கின் பெயர் | வகை |
|---|---|
| i) முதல் | ஆள்சார் க/கு |
| ii) கட்டடம் | சொத்து க/கு |
| iii) உள் ஏற்றிச் செல் செலவு | பெயரளவு க/கு |
| iv) ரொக்கம் | சொத்து க/கு |
| v) கழிவு பெற்றது | பெயரளவு க/கு |
| vi) வங்கி | ஆள்சார் க/கு |

34. ரொக்க கணக்கு

| நாள் | விவரம் | தொகை | ந | விவ | தொ |
|---|---|---|---|---|---|
| 17 ஏ1 | இருப்பு கீ/கொ | 100000 | | | |

சரக்கிருப்பு கணக்கு

| நாள் | விவரம் | தொகை | ந | விவ | தொ |
|---|---|---|---|---|---|
| 17 ஏ1 | இருப்பு கீ/கொ | 40000 | | | |

கடனாளி கணக்கு

| நாள் | விவரம் | தொகை | ந | விவ | தொ |
|---|---|---|---|---|---|
| 17 ஏ1 | இருப்பு கீ/கொ | 10000 | | | |

அறைகலன் கணக்கு

| நாள் | விவரம் | தொகை | ந | விவ | தொ |
|---|---|---|---|---|---|
| 17ஏ1 | இருப்பு கீ/கொ | 10000 | | | |

கடனீந்தோர் கணக்கு

| நாள் | விவ் | தொ | நாள் | விவரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| 17ஏ1 | | | 17 ஏ1 | இருப்பு கீ/கொ | 40000 |

முதல் கணக்கு

| நாள் | விவ் | தொ | நாள் | விவரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| 17ஏ1 | | | 17 ஏ1 | இருப்பு கீ/கொ | 120000 |

**35. எதிர்ப் பதிவை உதாரணத்துடன் விளக்குக.**
ஒரு நடவடிக்கையில் ரொக்கம் மற்றும் வங்கி என்ற இரு கணக்குகளும் தொடர்பு பெற்றிருந்தால் அந் நடவடிக்கையின் இரு தன்மைகளும் ரொக்கஏட்டில் பதியப்படுகின்றன. அவ்வாறு ஒரு நடவடிக்கையின் பற்று மற்றும் வரவுத் தன்மைகள் ரொக்கஏட்டில் பதியப்பட்டால் அது எதிர்பதிவு எனப்படும்.
உதாரணம்:- வங்கியில் பணம் செலுத்தியது:- இது ரொக்க ஏட்டில் பற்றுப் பக்கத்தில் உள்ள வங்கிப் பத்தியிலும் மற்றும் வரவுப் பக்கத்தில் உள்ள ரொக்கப் பத்தியிலும் பதியப்படும்.

**36. வங்கிச் சரிக்கட்டும் பட்டியல் தயாரிப்பதற்கான மூன்று காரணங்களைத் தருக.**
ரொக்க ஏட்டின்படியான வங்கி இருப்பும், வங்கிஅறிக்கையின் படியான வங்கி இருப்பும் வேறுபட்டிருப்பதற்கான காரணங்களை அடையாளம் காண
காசோலைகள் தீர்வடைவதில் ஏற்படும் காலதாமதத்தை கண்டறிய
ரொக்க ஏட்டின் வங்கி பத்தியின் சரியான இருப்பினை கணக்கிட

**37. தேய்மானம் ஏற்படுவதற்கான காரணங்கள் 1.தேய்வு மற்றும் உராய்வு:-** சாதாரணமாகவும் புலனாகும் நிலைச் சொத்தை பயன்படுத்தும் போது அதன் மதிப்பு குறைந்து கொண்டே செல்கிறது. அது தேய்வு மற்றும் உராய்வு என்று அழைக்கப்படுகிறது.
**2.காலப்போக்கு:-** காலப் போக்கு காரணமாக ஒரு சில சொத்துக்களை பயன்படுத்தினாலும் அல்லது பயன்படுத்தாமல் இருந்தாலும் அவற்றின் பயன்பாட்டு நிலை குறையும்.
**3.பராமரிப்பின்மை:-** சொத்துகள் சரிவர பராமரிக்கப்படும் போது அச்சொத்தின் வாழ்நாள் அதிகரிக்கிறது. சொத்துக்கள் சரிவர பராமரிக்கப்படவில்லை என்றால் அதிக அளவு தேய்மானத்திற்கான வாய்ப்புகள் உண்டு.

**38. நீள்பயன் வருவாயினச் செலவு என்றால் என்ன? இரண்டு உதாரணங்கள் தரவும்.**
நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட்ட வருவாயினத் தன்மையுள்ள ஒரு செலவின் பயன் எதிர்வரும் ஆண்டு அல்லது ஆண்டுகளுக்கும் கிடைக்குமானால் அச் செலவு நீள்பயன் வருவாயினச் செலவு ஆகும். இச் செலவின் பயன், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகளுக்கு கிடைக்கும்.
**எகா:-** விளம்பரத்திற்காக செய்யப்பட்ட பேரளவுத் தொகை, பொறி மற்றும் இயந்திரம் மீதான பேரளவு பழுதுபார்ப்புச் செலவுகள்.

**39. 31-12-16 நாளுக்குரிய இலாப நட்டகணக்கு**

| | | | |
|---|---|---|---|
| வாராக்கடன்<br>(+)புதிய ஐயக்கடன் | 1000<br>2450 | | |
| | **3450** | | |
| தள்ளுபடி ஒதுக்கு | **931** | | |

31-12-16 க்கான இருப்பு நிலைக்குறிப்பு

| பொறுப்புகள் | | சொத்துக்கள் | |
|---|---|---|---|
| | | பற்பலகடனாளிகள்<br>(-)வாராக்கடன் | 50000<br>**1000** |
| | | | 49000 |
| | | (-)ஐயக்கடன் | **2450** |
| | | | 46550 |
| | | (-)தள்ளுபடி ஒதுக்கு | 931 |
| | | | **45619** |

**40.வரவு இருப்பு கணக்குகள்:** பொறுப்புகள் (கடனீந்தோர், வமேப, ஒதுக்கு, காப்பு) விற்பனை, கொள்முதல் திருப்பம், வருமானங்கள் , ஆதாயங்கள்

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 7X5=35**

**41.அ.** ஜெயசீலியின் குறிப்பேட்டுப்பதிவுகள்

| நாள் | விவரம் | பற்று | வரவு |
|---|---|---|---|
| 2018 ஜன1 | ரொக்க க/கு ப<br>ஜெயசீலியின் முதல் க/கு | 80000 | 80000 |
| 2 | வங்கி க/கு ப<br>ரொக்க க/கு | 40000 | 40000 |
| 3 | கொள்முதல்க/கு ப<br>ரொக்க க/கு | 5000 | 5000 |
| 4 | ரொக்க க/கு ப<br>லிப்டன் க/கு | 10000 | 10000 |
| 5 | ரொக்க க/கு ப<br>விற்பனை க/கு | 11000 | 11000 |
| 6 | சம்பள க/கு ப<br>ரொக்க க/கு | 5000 | 5000 |
| 7 | லிப்டன் க/கு ப<br>வங்கி க/கு | 10000 | 10000 |
| 8 | அறைகலன்க/கு ப<br>ரொக்க க/கு | 4000 | 4000 |
| 9 | மின்கட்டணக/கு ப<br>ரொக்க க/கு | 1000 | 1000 |
| 10 | காப்பீட்டு முனைம க/கு ப<br>வங்கி க/கு | 300 | 300 |

**41.ஆ. எட்வர்டின் 31.12.16க்கான வியாபர க/கு**

| | | | | |
|---|---|---|---|---|
| தொ.சர | 89700 | விற்பனை | 356500 | |
| கொள்முதல் | 256500 | (-) திரு | 2500 | 354000 |
| நேரிவாயு | 10500 | இறுதிசரக் | | 130000 |
| மொ.இலாபம் | **127300** | | | |
| | 484000 | | | 484000 |

**எட்வர்டின் 31.12.16க்கான இ/ந க/கு**

| | | | | |
|---|---|---|---|---|
| கடன்வட்டி (+) கொடு | 300 900 | 1200 | மொத்த இலா | 127300 |
| பயணசெ | | 51250 | முதலீடுமீது வட்டி | 2550 |
| பழுதுசெ | | 4090 | | |
| வாராஐய | | 3000 | | |
| கடனாளி ஒதுக்கு | | 1140 | | |
| **நிகர லாபம்** | | **69170** | | |
| | | 129850 | | 129850 |

**எட்வர்டின் 31.12.16க்கான இருப்புநிலைக்குறிப்பு**

| | | | | |
|---|---|---|---|---|
| முதல் | 131500 | | முதலீடுகள் | 70000 |
| (+) நிகர லாபம் | 69170 200670 | | கடனாளி6000 (-)ஐய 3000 | |
| (-) எடுப்பு | 5000 | 195670 | (-) ஒது1140 | 55860 |
| கடன் | 20000 | | ரொக்கம் | 710 |
| கொடுபட | 900 | 20900 | | |
| கடனீந்தோர் | | 40000 | இறுதிசரக் | 130000 |
| | | **256570** | | **256570** |

**42.அ. குறிப்பேட்டுப்பதிவுகள்**

| **விவரம்** | **பற்று ரூ** | **வரவு ரூ** |
|---|---|---|
| ரொக்க க/கு ப.<br>கணேசனின் முதல் க/கு | 25000 | <br>25000 |
| வங்கி க/கு ப.<br>ரொக்க க/கு | 12500 | <br>12500 |
| அறைகலன் க/கு ப.<br>வங்கி க/கு | 2000 | <br>2000 |
| கொள்முதல் க/கு ப.<br>ரொக்க க/கு | 5000 | <br>5000 |
| வாசு க/கு ப.<br>விற்பனை க/கு | 4000 | <br>4000 |
| எடுப்பு க/கு ப.<br>கொள்முதல் க/கு | 500 | <br>500 |

**ப. ரொக்க க/கு வ.**

| நா | விவரம் | கு பஎ | தொ | நா | விவரம் | கு. எ | தொ |
|---|---|---|---|---|---|---|---|
| | முதல் | | 25000 | | வங்கி | | 12500 |
| | | | | | கொள்முதல் | | 5000 |
| | | | | | **இருகீ/இ** | | **7500** |
| | | | **25000** | | | | **25000** |
| | **இருகீ/கெ** | | **7500** | | | | |

**ப. கணேசனின் முதல் க/கு வ.**

| நாள் | விவரம் | கு பஎ | தொ | நாள் | விவரம் | கு. எ | தொ |
|---|---|---|---|---|---|---|---|
| | **இருகீ/இ** | | **25000** | | ரொ க/கு | | 25000 |

**ப. வங்கி க/கு வ.**

| நாள் | விவரம் | கு பஎ | தொ | நா | விவரம் | கு. எ | தொ |
|---|---|---|---|---|---|---|---|
| | ரொ க/கு | | 12500 | | அறைக/கு | | 2000 |
| | | | | | **இருகீ/இ** | | **10500** |

**ப. அறைகலன் க/கு வ.**

| நா | விவரம் | கு பஎ | தொ | நாள் | விவரம் | கு. எ | தொ |
|---|---|---|---|---|---|---|---|
| | வங்கிக/கு | | 2000 | | **இருகீ/இ** | | **2000** |

**ப. கொள்முதல் க/கு வ.**

| நாள் | விவரம் | கு பஎ | தொ | நாள் | விவரம் | கு. எ | தொ |
|---|---|---|---|---|---|---|---|
| | ரொ க/கு | | 5000 | | எடு க/கு | | 500 |
| | | | | | **இருகீ/இ** | | **4500** |

**ப. வாசு க/கு வ.**

| நாள் | விவரம் | கு பஎ | தொ | நாள் | விவரம் | கு. எ | தொ |
|---|---|---|---|---|---|---|---|
| | விற் க/கு | | 4000 | | **இருகீ/இ** | | **4000** |

**ப. எடுப்பு க/கு வ.**

| நா | விவரம் | கு பஎ | தொ | நாள் | விவரம் | கு. எ | தொ |
|---|---|---|---|---|---|---|---|
| | கொ க/கு | | 500 | | **இருகீ/இ** | | **500** |

**42.ஆ.**

| | |
|---|---|
| சரக்கு விற்பனை வாயிலாக பெற்றது ரூ 75000 | **வருவாயினம்** |
| வங்கியிடமிருந்து பெற்ற கடன் ரூ 250000 | **முதலினம்** |
| முதலீடுகள் விற்பனை செய்தது ரூ 120000 | **முதலினம்** |
| கழிவு பெற்றது ரூ 30000 | **வருவாயினம்** |
| புதிய இயந்திரம் நிறுவ கூலி ரூ14000 | **முதலினம்** |

**43.அ. ராஜேஷ் என்பவரின் இருப்பாய்வு**

| **வஎ** | **விவரம்** | **பற்று** | **வரவு** |
|---|---|---|---|
| 1 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 13000 | |
| 2 | வங்கிக் கட்டணம் | 750 | |
| 3 | பயணச்செலவுகள் | 350 | |
| 4 | பெற்ற தள்ளுபடி | | 1300 |
| 5 | கையிருப்பு ரொக்கம் | 1000 | |
| 6 | எடுப்புகள் | 7000 | |
| 7 | கடனாளிகள் | 17100 | |
| 8 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | | 12000 |
| 9 | முதல் | | 25900 |
| | **மொத்தம்** | **39200** | **39200** |

**43.ஆ. சரிக்கட்டுப் பதிவு**

| நாள் | விவரம் | பற்றுரூ | வரவுரூ |
|---|---|---|---|
| | இறுதிசரக்கிருப்பு க/கு ப.<br>வியாபார க/கு | 5000 | <br>5000 |
| | சம்பள க/கு ப.<br>கொடுபடவேசம்பள க/கு | 150 | <br>150 |
| | முகூசெகாப்பீடு க/கு ப.<br>காப்பீடு க/கு | 450 | <br>450 |
| | பெற்ற கழிவு க/கு ப.<br>முகூபெற் கழிவு க/கு | 20000 | <br>20000 |
| | கூடியுள்ள வட்டி க/கு ப.<br>முதலீடுமீதான வட்டி க/கு | 1000 | <br>1000 |

**44.அ. சந்தோஷ் கொள்முதல் ஏடு**

| **நாள்** | **விவரம்** | **தொகை** | **தொகை** |
|---|---|---|---|
| 2017 | **பிரசாத்** | | |
| ஏப்1 | 100மீ சில்க் துணி 1மீ 450 வீ100 | 45000 | |
| | 75மீ வெல்வெட் துணி 1மீ 180வீ | 13500 | 58500 |
| **20** | **ஹரிராம்** | | |
| | 50கட்டுகள் காடாத்துணி 1 730 | 36500 | |
| | 80 கட்டுகள் காலிக்கோ 1மீ650 | 52000 | **8850** |
| | **கொள்முதல்** | | **147000** |

**சந்தோஷ் விற்பனை ஏடு**

| **நாள்** | **விவரம்** | **தொகை** | **தொகை** |
|---|---|---|---|
| 2017 | **ரத்தினம்** | | |
| ஏப்10 | 60மீ சில்க்துணி 1மீ 490 60 | 29400 | |
| | 50மீ வெல்வெட் துணி, 1மீ 210வீ | 10500 | 39900 |
| **18** | **நாதன் நிறுவனம்** | | |
| | 100 மீ சில்க் துணி 1மீ 510வீ | | 51000 |
| | **விற்பனை** | | **90900** |

M.MuthuSelvam PG Asst MLWA HSS Madurai Cell No: 9842104826

| 44ஆ. | ரொக்கத் தள்ளுபடி | வியாபாரத் தள்ளுபடி |
|---|---|---|
| நோக்கம் | பொருளை வாங்கியவர் தொகையை முன்கூட்டி செலுத்துவதை ஊக்குவிக்கும் பொருட்டு இத் தள்ளுபடி அளிக்கப்படுகிறது. | வாங்குபவர் அதிகப்படியான எண்ணிக்கையில் பொருட்களை வாங்கும் பொருட்டு அவர்களை ஊக்குவிப்பதற்காக இத் தள்ளுபடி அளிக்கப்படுகிறது. |
| வழங்கப் படும் காலம் | ரொக்கத் தள்ளபடி, விற்றவர் அல்லது கடனீந்தோரால் வாங்கியவர் அல்லது கடனாளிக்கு தொகையைத் திரும்ப செலுத்தும் போது வழங்கப்படுகிறது. | வியாபாரத் தள்ளுபடி, விற்றவரால் வாங்கியவருக்கு பொருட்களை விற்கும் போது வழங்கப்படுகிறது. |
| தள்ளுபடி தொகை | தள்ளுபடி திரும்ப செலுத்தும் காலத்தை அடிப்படையாகக் கொண்டது. | தள்ளபடி பொருட்கள் வாங்கிய அளவினை அடிப்படையாகக் கொண்டது. |
| கணக்கேடுகளில் பதிவு செய்தல் | கணக்கேடுகளில் பதியப்படுகிறது. | கணக்கேடுகளில் பதியப்படுவது இல்லை. |
| இடாப்பி லிருந்து கழித்து காட்டுதல் | இடாப்பிலிருந்து கழித்துக் காட்டப்படமாட்டாது. | இடாப்பிலிருந்து கழித்து காட்டப்படும். |

**45.அ. வங்கி சரிக்கட்டும் பட்டியல்**

| விவரம் | தொகை | தொகை |
|---|---|---|
| ரொக்க ஏட்டின் படி இருப்பு | | 300 |
| கூட்:- விடுத்த காசோ முன்னிலை ப.விலன் | | 1000 |
| | | **1300** |
| கழி:- வைப்பு கா.வசூலித்த வரவு | 500 | |
| வைக்பட | 100 | |
| வங்கியால் பிடித்தம் செய்த வட்டி | 200 | **800** |
| வங்கி செலுத்திய வாடகை | | |
| **வங்கி அறிக்கையின் படி இருப்பு** | | **500** |

**45.ஆ. இயந்திரத்தின் மதிப்பைக் கணக்கிடல்**

| விவரம் | தொகை |
|---|---|
| இயந்திரத்தின் அடக்க விலை | 800000 |
| கழி:- முதல் ஆண்டு தேய்மானம் | **60000** |
| . | 740000 |
| கழி:- இரண்டாம் ஆண்டு தேய்மானம் | **111000** |
| | 629000 |
| கழி:- மூன்றாம் ஆண்டு தேய்மானம் | **94350** |
| சொத்தின் ஏடு மதிப்பு | 534650 |
| விற்ற விலை | 500000 |
| **விற்றதில் ஏற்பட்ட நட்டம்** | **34650** |

**46.அ. குறிப்பேட்டுப் பதிவுகள்**

| விவரம் | பற்று | வரவு |
|---|---|---|
| கொள்முதல் க/கு ப<br>அனாமத்துக் க/கு | 100 | <br>100 |
| அளித்த தள்ளுபடி க/கு ப<br>அனாமத்துக் க/கு | 575 | <br>575 |
| அனாமத்துக் க/கு ப<br>விற்பனை க/கு | 180 | <br>180 |
| அனாமத்துக் க/கு ப<br>சம்பளக் க/கு | 16200 | <br>16200 |
| முகிலன் க/கு ப<br>அனாமத்துக் க/கு | 1350 | <br>1350 |

**46.ஆ. பல்வேறு வகையான கணக்கியல் மென்பொருள்கள்**

**ஆயத்த மென் பொருள்கள்:-**

இவை வணிக நிறுவனங்கள் வாங்கியவுடன் உபயோகப்படுத்தக் கூடிய தரப்படுத்தப்பட்ட அல்லது ஆயத்ததொகுப்புகள் ஆகும். இந்தத் தொகுப்புகள் சிறிய மற்றும் பாரம்பாரிய வியாபார நிறுவனங்களால் பயன்படுத்தப்படுகின்றன. நிறுவுதல் மற்றும் பராமரிப்பு செலவுமிகக் குறைவு. Tally, Busy, Marg, Profit books என்பவை இவ்வகையிலான மென்பொருளுக்கு சில உதாரணங்களாகும்.

**திருத்தியமைக்கப்பட்டமென்பொருள்:-**

பல சமயங்களில் ஆயத்த மென்பொருள் வணிக நிறுவனங்களின் தேவைகளுக்கு ஏற்ப பொருந்துவது சாத்தியமில்லை. இச்சூழ்நிலைகளில் திருத்தியமைக்கப்பட்ட மென்பொருள் வணிகநிறுவனத்தின் தேவைகள் பூர்த்தியடைவதற்கு உதவியாக இருக்கின்றன. திருத்தியமைக்கப்பட்ட மென்பொருளை வணிக மையத்தின் தேவைக்கு ஏற்றாற் போல் மாற்றி அமைக்கலாம். எகா:- பணியாளர்களின் வருகையின் பதிவு செய்யும் மென்பொருளை வாடிக்கையாளாரின் தேவைக்கிணங்க அது பணியாளர்களின் ஒரு மாதத்தின் விடுப்புகளை கணக்கிடவும் செய்திடலாம். இந்தத் தொகுப்புகள் நடுத்தர அல்லது பெரும் வணிகமையங்களால் பயன்படுத்தப்படுகின்றன.

**உருவாக்கப்பட்ட மென்பொருள்:-**

பெரிய வணிக மையங்கள் தங்களுக்கென்று தனிவழியான செயல்பாட்டைக் கொண்டிருக்கும். பயனுடைய மேலாண்மை தகவல் முறைக்கு சிறிய அல்லது நடுத்தர அளவிலான வணிக மையங்களிலிருந்து தேவைப்படாத பலதரப்பட்ட மற்றும் குறிப்பிட்ட தகவல்கள் பல பயனாளிகளுக்கு அடிக்கடி தேவைப்படுகின்றன. அம் மாதிரியான வணிகமையங்களில் அவைகளின் செயல்பாட்டைப் பொருத்து, தேவையின் அடிப்படையிலான மென்பொருளாக, உருவாக்கப்பட்ட தொகுப்புகள் நிறுவப்படுகின்றன.

**47.அ. ராமலிங்கம் என்பவரது தனிப்பத்தி ரொக்கஏடு**

| நாள் | பெறுதல்கள் | தொகை | நாள் | செலுத்தல்கள் | தொகை |
|---|---|---|---|---|---|
| 1ஜீ1 | இருப்புகீகொ | 32000 | ஜீ6 | கட்டுமானசெல | 300 |
| 5 | கீர்த்தனா | 5000 | 7 | கொள்முதல் | 12400 |
| 8 | விற்பனை | 2600 | 10 | சம்பளம் | 7000 |
| 27 | வங்கி | 2000 | 11 | பாலா | 3000 |
| | | | 24 | வங்கி | 4000 |
| | | | 31 | அ.வாடகை | 6000 |
| | | | **31** | **இருப்பு கீழ்** | **8900** |
| | | **41600** | | | **41600** |
| **ஆ1** | **இருப்புகீகொ** | **8900** | | | |

| 47.ஆ. குறிப்பேடு | பேரேடு |
|---|---|
| நடவடிக்கை நிகழ்ந்தவுடன் இதில் பதிவு செய்யப்படும். | குறிப்பேடு தயாரித்த அதே நாளில் அல்லது துணைஏடுகள் பராமரித்து வந்தால், ஒரு குறிப்பிட்ட காலத்தின் இறுதியில் அதாவது வாரத்தின் கடைசி நாள் அல்லது இரு வாரங்களுக்கு ஒரு முறை இதில் எடுத்தெழுதப்படும். |
| பதிவு செய்வது முதல் நிலையாகும் | குறிப்பேட்டில் பதிந்த பிறகு பேரேடு தயாரிப்பதால், இது இரண்டாவது நிலையாகும். |
| நடவடிக்கைகள் நிகழ்ந்த வரிசைப்படி அதாவது நடவடிக்கைகள் நிகழ்ந்த நாளின்படி பதிவு செய்யப்படுகிறது. | கணக்குகளை வரிசைப்படி பதிவுகள் செய்யப்படுகின்றன. |

**குறிப்பு:** அரசு வழங்கும் விடைக்குறிப்பினை ஒப்பிட்டு பார்த்து மைய மதிப்பீட்டு பணியை மேற்கொள்ளுமாறு ஆசிரியப் பெருமக்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்

www.maduraicommerce.com

M.MuthuSelvam PG Asst MLWA HSS Madurai Cell No: 9842104826